Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

God is faithful for the past seventy one years.

Vol. 71 கர்த்தாவே, நான் துதியின் சத்தத்தைத் தொனிக்கப்பண்ணி, உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பதற்காக, சங்.26:6 மார்ச் 2025 No.3

சோதனைகளும் குழப்பங்களும் வரும்போது உங்கள் தளத்தைப் பற்றிக் கொள்ளுங்கள்

Hold your ground during trials and troubles

Rich Carmicheal

(ஏசாயா 61:1-3 வசனங்களைப் படிக்க)

கர்த்தருடைய ஆச்சரியமான பணி

இயேசு தமது ஊழியத்தின் ஆரம்பப் பகுதியில் அழைப்பு அபிஷேகம் ஆகிய வற்றைக் குறித்து இந்தப் பகுதியிலிருந்து எடுத்துக் கூறியதை லூக். 4:18-19 வசனங் களில் பார்க்கலாம். எத்தனை இரக்கமும் வல்லமையும் நிறைந்த நமது வாழ்வில் அவரது செயல்பாடு அழகாக விவரிக்கப் படுகிறது. அவர் நல்ல செய்திகளை நம்மோடு பகிர்ந்து கொள்ளுகிறார். நாம் ஆவியில் எளிமையுள்ளவர்களாயிருக்க வேண்டும். அவர் நமது உடைந்த இருத யங்களை குணமாக்கி, அடிமைத்தனத்தி லிருந்து விடுவித்து, நமது கட்டுகளை அவிழ்க்கிறார். நாம் கண்ணீர் விடும் போது நம்மைத் தேற்றுகிறார். சாம்ப லுக்குப் பதிலாக சிங்காரத்தைத் தருகிறார், ஆவி தொய்ந்து போகும் போது துதியின் வஸ்திரத்தைத் தருகிறார்.

இந்த விலையேறப் பெற்ற ஊழியத்தின் நோக்கத்தை பாருங்கள்: "நீதியின் விருட்சங்கள், அவர் மகிமைப் படும்படியாக கர்த்தரால் நாட்டப்பட்ட வர்கள்." கஷ்டமான காலங்களில் - ஆரோக்கியம், சுயாதீனம், ஆறுதல், அழகு, சந்தோஷம், துதி மற்றும் நீதியால் நம்மை நிரப்புகிறவர். ஆகையால் நாம் அவரால் நாட்டப்பட்ட விருட்சங்க ளெனவும் ஆகிறோம். எல்லா மகிமையும் அவர் பெற்றுக்கொள்கிறார்.

சார்லஸ் ஸ்பர்ஜன் இவ்வாறு சுருக்கமாகக் கூறுகிறார்: "அவர்கள் நீதியின் விருட்சங்கள் எனவும் கர்த்தரால் நாட்டப்பட்டவர்கள் எனவும் அழைக்கப் படுவார்கள்". அதாவது சந்தோஷம் பகிர்ந் தளிக்கப்பட்டு, தூய ஆவியானவரின் அபிஷேகம் இறங்கும் போது, விரக்திக்குப் பதிலாக மக்கள் இவ்வாறு கூறுவார்கள்: "இது தேவனுடைய பணி, இந்த விருட்சம் தேவனால் நடப்பட்டது, வேறு எவரோ நட்டது போல இது வளரு வதில்லை. இம்மனிதன் தேவனுடைய உருவாக்கம். இவனது சந்தோஷம் தேவனால் அருளப்பட்டது".

கர்த்தரை நம்புங்கள்

ஏதேனும் கடினங்களை நீங்கள் சந்திக்கும் போது கர்த்தர் உங்கள் சூழ்நிலைகள் அனைத்தையும் அறிவ தோடு, ஆழமாகக் கரிசனை கொண்டு, ஆரோக்கியம், சுயாதீனம், ஆறுதல், சிங்காரம், சந்தோஷம் மற்றும் துதி நிறைந்த இடத்திற்குக் கொண்டுவந்து விடுவார். உங்கள் வாழ்வில் அவரது நாமம் மகிமைப்படும். அப்போஸ்தல னாகிய பேதுரு இவ்வாறு கூறுகிறார்: "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவரா யிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே கொஞ்சக்காலம் பாடனு பவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி நிலைநிறுத் துவார்" 1பேதுரு 5:10-11.

நிச்சயமாக நாம் நிறைவேற்ற வேண்டிய பங்கு உண்டு. பேதுரு பின்னும் கூறும் போது: "ஆகையால் ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள்" 1பேதுரு 5:6,7. கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப் படுவதும் அவரை நம்புவதும், அவரையே சார்ந்து கொள்ளுவதும் முக்கியம். "கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார், நீதிமானை ஒருபோதும் தள்ளாட வொட் டார்" சங்:55:22. "ஜனங்களே எக்காலத் திலும் அவரை நம்புங்கள்" சங்.62:8.

தளத்தைப் பற்றிக்கொள்ளுங்கள்

நாம் சோதனைகள் பாடுகள் வழியாகவே விடாமுயற்சியோடு கடந்து செல்ல வேண்டியவர்கள். விசுவாசத்தின் பரிசோதனை விடாமுயற்சியையும், விடாமுயற்சி இறுதியில் நம்மை ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல் பூரணராயும் நிறைவுள்ளவர்களாகவும் ஆக்குகிறது யாக்.1:2-4. கர்த்தர் தீர்க்கர ளோடும், யோபுவினோடும் இடைபட்ட விதம் இதற்கு எடுத்துக் காட்டுகளாகும். "என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தி னாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பப் படுதலுக்கும், நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக் கொள்ளுங் கள். இதோ, பொறுமையாயிருக்கிறவர் களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்! கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர் கள்! கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமும் உள்ளவராயிருக்கிறாரே" யாக். 5:10-11.

யோபைப் பொறுத்தவரை, அவனது வாழ்வில் எத்தனை இழப்புகள் அவனது வாழ்விலும், ஆரோக்கியத் திலும் வேறு எவரும் சகிக்க முடியாத அளவில் சகிக்க வேண்டியதாயிருந்தது. ஆனாலும் முழுவதிலும் தேவனுடைய ஒரு நோக்கம் அதிலிருந்ததை நாம் காணமுடிகிறது. "முடிவு கர்த்தரால் ஏற்பட்டது". அவரது உத்தமத்தில் அவரது உருக்கம், இரக்கம் ஆகியவற்றால் கிரமமாக தேவன் சோதனைகள் மூலம் பிந்திய வாழ்வுப் பகுதியை முன்னதை விட அதிகமாக ஆசீர்வதித்தார். அவனுக்கு தம்முடைய ஆழமான வெளிப்படுத்தலைத் தந்தார். இவை எல்லாவற்றிற்கும் காரணம் அவனுடைய பொறுமை. இவையெல்லாம் ஏன் சம்பவிக்கின்றன என்று அவன் அறியா திருந்தும் அவன் தன் கர்த்தரிடத்திலுள்ள விசுவாசத்தை விட்டுவிடவில்லை.

பொறுமையின் முக்கியத்துவத்தை உணர்ந்த எங்கள் வளாகத்திலுள்ள ஒரு மரத்தைக் குறித்துச் சொல்ல விரும்பு கிறேன். அது 200 வருடங்கள் பழமை யான ஒரு ஓக் மரம். ஒரு ஓக் மரம் என்பது ஒரு விதை தான், ஒரு தரையைப் பற்றிக் கொண்டு வளருகிறது. இந்த மரம் அனேக வருடங்களைக் கடந்து வந்திருக் கிறது. அதிகப்படியான வெப்பம் கடுமையான குளிர் அடைமழை கொடூர மான வறட்சி பயங்கரமான புயல்கள் பலத்த காற்றுகள் போன்ற எல்லாவற் றையும் பொறுமையாகத் தாண்டி செழித்து, இந்த விதமான எதிர்சக்திகளால் மேலும் மேலும் உறுதியைப் பெற்று நிற்கிறது. அதனால் நாமும் "அது மாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமை யையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக் குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திர வங்களிலேயும் மேன்மை பாராட்டுகி றோம்" ரோமர் 5:3-4.

எனவே இவ்விதமான ஒரு சோதனையின் மத்தியில் நீங்கள் இருந்தால் கர்த்தரை நம்பிப் பொறுமை யாயிருங்கள். கர்த்தர் உத்தமர். அவர் உங்களை நிலைநிறுத்தி, உங்கள் வாழ் நாள் முழுவதும் உங்களை நடத்துவார். அப்போஸ்தலனாகிய பவுலைப் போலவே கிறிஸ்துவின் கிருபை உங்களுக்குப் போதுமானதாயிருக்கும். அவருடைய பெலன் உங்கள் பெலவீனத்தில் பரி பூரணமாய் விளங்கும் 2 கொரி. 12:9. உங்கள் அனுபவத்தில் "...தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு, சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" ரோ. 8:28. இதனை பெற்றுக் கொள்வீர்கள்.

வருகை யின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

2025 எழுப்புதலுக்காக ஜெபிக்கும் ஆண்டு

உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ? சங். 85:6.

Wilt thou not revive us again; that thy people may rejoice in thee? Ps.85:6.

அநாதி தேவனே உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம் உபாகமம் 33:27.

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற் பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2025 மார்ச் மாத தூதனுக்காக என் தேவனை நன்றி யோடும், '**வெகுமனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்**' துதிக்கிறேன்.

அப்பொழுது ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, இரட்சிக்கப்படுகிறவர்கள் சிலபேர் தானோ என்று கேட்டான் லூக்கா 13:23.

கடந்த மாதம் **இரட்சிப்பு** என்றால் என்ன என்று எழுதினேன். இம்மாதம் ஆண்டவராகிய இயேசு சொன்ன பதிலை தியானிப்போம்.

அதற்கு அவர் :

இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள், அநேகர் உட்பிரவேசிக்க வகைதேடினாலும் அவர்களாலே கூடாமற்போகும் என்று உங்களுக்குச் சொல்லு கிறேன் லூக்கா 13:24.

I நெருக்கமான வழி

இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக் கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்.

ஜீவனுக்கு போகிற வாசல் இடுக்கமும், ***வழி நெருக்கமு மாயிருக்கிறது;*** அதை கண்டுபிடிக்கிறவர்கள் சிலர் மத். 7:13,14.

அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும், ஜீவனுமா யிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினி டத்தில் வரான் என்றார் யோவான் 14:6.

அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்.

தன் ஜீவனை ரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தமாகத் தன்ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான் என்றார் மத்தேயு 16:24,25.

II நெருக்கமான உறவு

உன்னதப்பாட்டு

அவர் தமது வாயின் முத்தங்களால் என்னை முத்த மிடுவாராக; உமது நேசம் திராட்சரசத்தைப் பார்க்கிலும் இன்ப மானது உன்.1:2.

Let him **Kiss** me with the **Kisses** of his mouth; for thy love is better than wine.

ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே, அழிந்து போகும் ஆத்துமாக்களைக் குறித்த பாரத்தை எங்கள் மேல் போடும். சபைகளின் நிர்பந்த நிலைமையைக் குறித்த தரிசனத்தை எங்களுக்குத் தாரும். ஜெபத்தில் எங்களுக்கு ஆத்திரத்தை அளியும். நித்திரையை எங்கள் கண்களுக்கு தூரமாக்கும். அசட்டையை எங்களை விட்டகற்றி கண்ணீரையும் பெருமூச்சையும் தாரும். பிதாவின் வலது பாரிசத்திலிருந்து வேண்டிக் கொண்டிருக் கிறவரே, ஜெபியாத பாவிகளாகிய எங்கள் மேல் கிருபையின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவியையும் பொழிந் தருளும், ஆமென். ரோ. 8:26; எபி. 5:7; சகரியா 12:10.

திராட்ச ரசத்தால் என்னைத் தேற்றுங்கள், கிச்சிலிப் பழங்களால் என்னை ஆற்றுங்கள்; நேசத்தால் சோகமடைந் திருக்கிறேன்.

அவர் இடதுகை என் தலையின் கீழ் இருக்கிறது; அவர் வலதுகை என்னை அணைத்துக் கொள்ளுகிறது உன்.2:5,6.

அருமை சகோதரி ***எஸ்தர் பேபி*** அவர்களுடன் நான் பாடி பதிவு செய்த எனது பாடல் ஒன்றை கீழே அச்சிடுகிறேன்:

என் நேசர் வெண்மையும் சிவப்புமானவர்
பதினாயிரம் பேர்களிலும் சிறந்தவர்

ஸ்திரீயே ரூபவதியே
உன் நேசர் எதனால் விசேஷித்தவர்
மற்ற நேசரைப் பார்க்கிலும்
உன் நேசர் எதனால் விசேஷித்தவர்

1. நேசரே நீர் பிரியமானவர்
நேசத்தால் நான் சோகமடைகிறேன்
திராட்ச ரசத்தால் என்னை தேற்றி
கிச்சிலி பழத்தால் என்னை ஆற்றி
நேசரண்டை அழைத்துச் செல்லுங்கள்

2. உமது நாமம் இன்பமானது
உமக்கு பின்னே ஓடி வருவோம்
ராஜா என்னை தமது அறையில்
அழைத்து வந்தார், அவரில் என்றும்
ஆர்ப்பரித்து ஒன்றாய் வாழுவோம்

3. நேசரே நீர் மதுரமானவர்
உமது நாமம் ஊற்றுண்ட தைலம்
இடது கை என் தலையின் கீழே
வலது கரத்தால் என்னை அணைத்து
சேர்த்துக் கொள்ளும் அன்பின் இயேசுவே

(3-ம் பக்கம் பார்க்க)

ஆண்டு காணிக்கை ரூபாய் 500

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியூபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

III நெருக்கப்படுகிற அனுபவம்

ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்திற்கு வந்ததற்கான மூன்று காரணங்கள்:

1. பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் 1தீமோ.1:15.

2. நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன் யோவான் 10:10

3. பூமியின் மேல் அக்கினியைப் போட வந்தேன், அது இப்பொழுதே பற்றி எரிய வேண்டுமென்று விரும்புகிறேன்.

ஆகிலும் நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நான முண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன் லூக்கா 12:49,50.

அப்பொழுது, இயேசு அவர்களோடே கெத்செமனே என்னப்பட்ட இடத்திற்கு வந்து, சீஷர்களை நோக்கி: நான் அங்கே போய் ஜெபம் பண்ணுமளவும் நீங்கள் இங்கே உட்கார்ந்திருங்கள் என்று சொல்லி;

பேதுருவையும் செபெதேயுவின் குமாரர் இருவரையும் கூட்டிக்கொண்டு போய், துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார் மத்.26:36,37.

அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்; அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது லூக்கா 22:44.

டேவிட் ப்ரெய்னார்ட் (David Brainerd) நுரையீரல் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளி, ஆனால் திறப்பிலே நின்று சுவரை அடைப்பதிலே ஒரு மாவீரன். வியாதியின் கொடுமை அவன் வாலிபத்தை வாட்டி வதைத்தது, ஆனால் அவன் உள்ளத்தில் ஊறிய ஆத்தும பாரம் அதனை வென்றது. வடஅமெரிக்கா செவ் இந்திய மக்களுக்காக தன் ஜீவனை விட்ட தேவனுடைய மனிதனாக விளங்குகிறார். வட பென்சில்வேனியா (Northern Penneylvania) காடுகளில் கடுங் குளிர்காலத்தில் முட்டளவு பனி உறைந்த தரையின் மீது முழங்கால்படியிட்டு இரவு முழுவதும் செவ்இந்தியர்களுக்காக கதறி அழுது ஜெபித்தார். ஆத்துமாக்களுக்காக ஆவியில் ஆண்டவரோடு போராடி கர்ப்ப வேதனைப்பட்டார். அவரைச் சுற்றிலும் பனி பெய்யும், ஆனால் அவர் சரீரம் வியர்வையினால் நனைந்து போகும். கெத்சமனேயின் அனுபவம் என்று நினைக்கிறேன். வியாதி அதிகரித்தது. 29-ம் வயதில் ஆண்டவரை அடைந்தார். ப்ரெய்னார்ட் ஜெபத்தினால் அமெரிக்க - வட இந்தியர்கள் மத்தியில் மாபெரும் எழுப்புதலைக் கர்த்தர் அனுப்பினார்.

மூன்று நாடுகளை குலுக்கிய, ஓய்வின்றி உழைத்த, சுவிசேஷகனாகிய **ஜான் வெஸ்லி** இவ்விதமாக சொன்னார்: "ஒவ்வொரு பிரசங்கியும் டேவிட் ப்ரெய்னார்டின் வாழ்க்கை சரிதையைப் படிக்கவேண்டும்."

எழுப்புதலின் திறவுகோல்

திரள் திரளாய் மக்கள் இரட்சிக்கப்படுவதன் திறவுகோல்! பெந்தெகொஸ்தின் திறவுகோல் தேவ மக்களின் கைகளில்தான் இருக்கிறது! இன்று நமது சபைகளின் மிகப்பெரிய தேவை ஆத்தும பாரமும் உடைந்த உள்ளமும் உடையவர்களான விசுவாசிகளே. சிறந்த பிரசங்கிகளல்ல. பெரிய பிரச்சாரமல்ல, இனிய சங்கீதமுமல்ல; இவை எல்லாவற்றையும் தேவன் பயன்படுத்தக்கூடும்.

இன்று நமது சபைகளில், அழுகையோடும் அங்கலாய்ப்போடும் தேவ சமூகத்தில் முகங்குப்புற விழுந்து, வேதனையோடும், வியாகுலத்தோடும் வேண்டிக்கொள்வதே இன்றியமையாத அவசியமாயிருக்கிறது! தேவன் இரங்கித் தலையிடுவதால் நாட்டில் நீதி நிலை நாட்டப்படத்தக்கதாக இரவு பகலாய் இடைவிடாமல், வாஞ்சையோடும் கண்ணீரோடும் வேண்டிக் கொள்ளுகிற வர்களே இன்று நமது சபைகளுக்குத் தேவை.

ஜெபிக்கும் தேவ மக்களின் கண்ணீர் வெள்ளத்தாலன்றி உலகத்தில் அதிகமாய்ப் பரம்பிய ஒரு எழுப்புதலையும் நான் அறிவதில்லை. கண்ணீருக்கும் தேவ கிருபைக்கும் உள்ள சம்பந்தம் எதுவோ, நான் அறியேன்; அழுது கதறி, ஆத்துமாவையே அவர் பாதத்தில் ஊற்றி, ஆண்டவரே எழுப்புதலைத் தாரும் அல்லது நாங்கள் இறந்தே போவோம் என்று சொல்லுமளவுக்கு நம்மில் சிலரது உள்ளங்களாவது உடையுமானால் அப்போது எழுப்புதல் ஏற்படும்.

தேவனிடமிருந்து சகல நன்மைகளையும் பெற்றுக் கொண்டு அவருக்கு எதுவுமே கொடாதிருக்கும் சுயநல கிறிஸ்தவத்தை அடியோடு அகற்றி விட ஆயத்தமாயிருக்கிறீர்களா? அதற்குப் பதிலாக தீரமும், தைரியமும் வெற்றியுமுள்ள ஒரு கிறிஸ்தவ வாழ்க்கையை அடைந்து கொள்ள ஆசிக்கிறீர்களா?

கிறிஸ்து நமக்காகத் தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தது போல நாமும் நமது ஜீவனை அவருக்காக அர்ப்பணிக்க தேவன் தாமே நமக்குத் தேவையான கிருபையை அளிப்பாராக.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,

அலுவலகம் : 95432 21008 வெஸ்லி தேவதாசன்
உதவி : 94897 40295 (WESLEY DEVADASON)

தூய ஆவியானவர் ஒரு தேற்றரவாளன்

The Holy Spirit a Comforter

Octavius Winslow

இவ்வுலகில் தேவ பக்தர்கள் செல்லும்படி நியமிக்கப்பட்ட பாதையை அவர்களில் அனேகர் மறந்து விடுவது துக்கமானது. அவர்களது பாதை பாடு நிறைந்தது. எனவே மிருதுவானதும், புஷ்பங்களால் நிறைந்ததும், எளிதானதும் அல்ல, அது கரடு முரடானதும் முட்கள் நிறைந்ததும், கடினமானதுமாகும். விசுவாசியோ அடிக்கடி பரலோகத்தை முழுவதுமாய் இங்கு அனுபவிக்க விரும்புகிறான். எத்தனை ஆவிக்குரிய இனிய அனுபவங்கள் இருந்தாலும் தற்காலம் வனாந்தரம் போன்றது, அதோடு வாழ்க்கை ஒரு யாத்ரீகனைப் போலவும் பரதேசியைப் போலவும் இருக்கும் என்பதை மறந்து விடுகிறான். யோவான் 16:33-ல் இயேசு: "...உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு" என்றார். அப்போஸ்தலனாகிய பவுலும் இதை ஆதரிக்கிறார்: "...நாம் அனேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று சொன்னார்கள்" அப்.14:22. துன்பங்கள் வெவ்வேறு வகையானவை, ஆனால் இது எல்லா கர்த்தருடைய பிள்ளைகளுக்கும் உரியது. ***உபத்திரவம் இல்லாவிடில் பிதாவின் புத்திர சுவிகாரம் நமக்கில்லை.*** எபி.12:6-ன்படி, "கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ, அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்கிறது போல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்தி மதியை மறந்தீர்கள்" எபி.12:6. ஆனால் எந்த சோதனையானாலும் துன்பமானாலும் ஆவியானவர்தான் தேற்றரவாளன் யோவா.14:26. அவர் எவ்வாறு துன்பப்பட்ட ஆத்துமாவுக்கு ஆறுதல் தருகிறார்?

தேவ பக்தர்கள் செல்லும்படி நியமிக்கப்பட்ட பாதை மிருதுவானதும், பஷ்பங்களால் நிறைந்ததும், எளிதானதும் அல்ல, அது கரடு முரடானதும் முட்கள் நிறைந்ததும், கடினமானது மாகும். விசுவாசியோ அடிக்கடி பரலோகத்தை முழுவதுமாய் இங்கு அனுபவிக்க விரும்புகிறான்.

தேவனுடைய அன்பை வெளிப்படுத்துகிறார்

"சோதனை வேளையில் அவர் தேவனும் பிதாவுமாயிருக்கிறவரின் அன்பை வெளிப்படுத்துகிறார்".

அவர் விசுவாசிக்கு தமது துக்கத்தை வெளிப்படுத்துகிறார். அது, அவரது கோபத்திற்கு தூரமானது. அது அன்பின் கனி. அது தேவனுடைய இருதயத்திலிருந்து வருகிறது; எதற்காகவெனில் நம் ஆத்துமாவை அவரிடம் இழுத்துக் கொள்ள வேண்டும், அவரது இரக்கத்தின் ஆழத்தையும் தமது உருக்கத்தையும் வெளிப்படுத்த வேண்டும். ஏனெனில் "***கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனை அவர் சிட்சிக்கிறார்***" (எபி. 12:6). ஓ காயப்பட்ட ஆவியில் அவரது தேற்றுதல் பாய்ந்து வருவது எவ்வளவு பெரிது! அவரது ஆழமான மாறாத அன்பு, உடன்படிக்கையின் அன்பு அவரது சிட்சிக்கும் கரத்தில் இருக்கிறது. துன்பம் உடன்படிக்கைவரை செல்லுகிறது. அந்த உடன்படிக்கை மூலம் உடன் படிக்கையின் தேவனுடைய இருதயம் வரை செல்லுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தேவனுடைய நோக்கத்தின் வெளிப்பாடு

எதற்காக இந்தத்துன்பம் அனுப்பப் பட்டது என்ற முடிவை வெளிப்படுத்தி அவர் தேற்றுகிறார். விசுவாசிக்கு அவர் சிட்சை, வேதனையளிப்பதாக இருந்தாலும் அது தேவை. உலகம் ஆத்துமாவின் மேல் ஊடுருவலாம்; சில பாவங்கள் அவரை சிலுவையில் அறைந்து கொண்டேயிருக்கலாம். பிற அன்புகள் இயேசுவை வெளியாக்கலாம் அல்லது சில ஆவிக்குரிய கடமைகள் உதாசீனப்படுத்தப்பட்டிருக்கலாம். தேற்றரவாளன் நமது செவிகளைத்திறந்து பிரம்பின் சத்தத்தைக் கேட்டு அதை நியமித்தவரையும் அறிந்துகொள்ளலாம். ஏன் கர்த்தர் அடித்தாரென பார்க்க ஆரம்பித்து, அவர் மீது முரட்டு கீழ் காற்றை வீசப்பண்ணினார், ஏன் காயப் படுத்தினார் என்றும் சிந்திக்க ஆரம்பிக் கிறார். தண்டிக்கப்பட்ட இருதயம் அதன் அலைவுகளிலிருந்தும் காயங்களிலிருந்தும், இரத்தம் வடிதலிலிருந்தும் பாடுகளிலு மிருந்து கொண்டே ஒரு காயப்பட்ட, இரத்தம் சிந்தும், பாடு சகிக்கும் இரட்சகரைத் தேடுகிறது. உடன்படிக் கையின் சிட்சையிலிருந்து பாய்ந்து வரும் ஆறுதலை யார் கணக்கிட முடியும்? சோதனையின் முடிவு ஏற்படும் போது கிருபையில் நமது வளர்ச்சிக்குத் தடை, இயேசுவின் மகிமையை மங்கச் செய்த பொருள், அவரது அன்பின் சந்திப்பை நிறுத்தியவை போன்றவற்றை நாம் கண்டுபிடிக்க முடியும். அப்போது விசுவாசி 'ஆசீர்வாதமான சிட்சையே' என ஆச்சரியப்படுவான்.

"இந்த சிட்சை நன்மைகளை ஏற்படுத்தியது. மெதுவான தண்டனை அநேக தீமைகளை சரிசெய்துவிட்டது -எனக்கு மிகுந்த ஆரோக்கியத்தை உருவாக்கிய இனிய மருந்து இது" என்று சொல்ல ஏதுவாகும்.

கிறிஸ்துவே உருக்கத்தின் வெளிப்பாடு

இயேசுவின் இரக்கத்தையும் மனவுருக்கத்தையும் வெளிப்படுத்தும் போது ஆவியானவர் மிகுந்த பயனுள்ள விதத்தில் சோதிக்கப்பட்டு, துன்புற்ற ஆத்துமாவுக்கு தேற்றுதலை தருகிறார். அவர் மனிதனாக உருவெடுத்த அவரது உருக்கத்தை சாட்சியிடுகிறார். நமது இயற்கையை எடுத்துக்கொண்டபோது இயேசு ஒரே ஒரு காரியத்தைப் பார்வையில் வைத்திருந்தால், அது அவரது மக்களோ டுள்ள நெருங்கிய உறவு மூலம் உடனடி ஆறுதலையும் ஆதரவையும் பெற்றுக் கொள்வதாகும். அவரது மனித அவதாரம் அவருடைய கீழ்ப்படிதலையும் அதனால் தண்டனையின் பாடுகளை ஏற்றுக் கொண்டதை உறுதிப்படுத்துகிறது. ஆனால் இதனோடு தொடர்புடையதும் இதனால் விளைவதும் என்னவெனில் அவரது நிரம்பி வழியும் கால்வாயாகிய மனதுருக்கம் தொடர்ந்து தேவ பக்தர்கள் ஆபத்துக்காலத்தில் நிற்கவும், தொடர்ந்து பெற்றுக் கொள்ளவும் கூடும். இயேசு நமது சகோதரர். "**இடுக்கண்ணில் உதவுவே சகோதரன் பிறந்திருக்கிறான்**" நீதி.17:17. "அன்றியும் அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவ காரியங்களைக் குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியரா யிருக்கும் படிக்கு எவ் விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிற்று" எபி.2:17. "நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவற்றிலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவரா யிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக் கிறார்" எபி.4:15.

இங்குதான் துக்கமான சூழ் நிலையின் நேரத்தில் உண்மையானதும் ஆசீர்வாதமுமான தேற்றரவு திறந்தது. கர்த்தருடைய பிள்ளைகள் சோதிக்கப் பட்டவர்கள் -இயேசுவும் சோதிக்கப் பட்ட இரட்சகர். கர்த்தருடைய ஜனங்கள் துன்புறுத்தப்படும் ஜனங்கள்-இயேசு கசப்பான பாத்திரத்தை உறிஞ்சிக் குடித்தவர். கர்த்தருடைய ஜனங்கள் பாடு அனுபவிக்கும் குடும்பம்- "அவர் துக்கம் நிறைந்தவரும் பாடு அனுபவித்தவரு மாய் இருந்தார்" ஏசா.53:3. தம்முடைய ஜனங்களின் நிலைமைக்கு ஏற்றபடி தம்மைத் தாழ்த்தினார். முற்றிலும் அவர்களோடு தம்மை இணைத்துக் கொண்டார். பாடு அனுபவிக்கும் வகையில் முற்றிலும் மனித ரூபத்தை எடுத்து துன்பப்படுகிற யாவரோடும் எல்லாவிதத்திலும் பொருந்தியவராய் மனதுருக்கம் கொண்டார். அவர்கள் எந்தக் காரணத்தால் துக்கம் அனுபவித்தார்கள் என்று அவர் பார்க்கவில்லை. அவர் நம்முடைய எலும்பின் எலும்பும் மாம்சத்தின் மாம்சமுமானதே நமக்குப் போதுமானது. அவரது இருதயம் உருக் கத்தாலும் இரக்கத்தாலும் ஆகியிருந்தது. அதுவும் பாவ பெலவீனத்தால் கட்டுப் படாததாயிருந்தது. துக்கம் அவரது இதயத்துக்கு அன்னியமல்ல. துக்கம் ஆழமாக ஆத்துமாவை வடுப்படுத்தி யிருந்தது. அந்த வியாகுலம் அதன் அடையாளம் அவரது முகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் வரையப்பட்டிருந்தது.

இதைவிடக் கூடுதலாக நமது தேவை என்ன? எதைக் கூடுதலாகக் கேட்க்கூடும்? நமது இயற்கை? அவர் அதை எடுத்துக்கொண்டார். நமது நோய்? அவர் அதை சுமந்தார். நமது துக்கங்கள்? அவர் அவற்றை உணர்ந்தார். நமது சிலுவைகள்? அவர் அவற்றைச் சுமந்தார். நமது பாவங்கள்? அவர் அவற்றை மன்னித்துவிட்டார். அவர் பாடு படும் தமது பிள்ளைகளுக்கு முன்பாக சென்றார். இப்போது துக்கம் வேண்டாம், பாரம் சுமக்க வேண்டாம், எந்தப் பாத்திரத்திலும் குடிக்க வேண்டாம், ஏனெனில் எல்லாவற்றையும் அவர் அனுபவித்துவிட்டார். அவரது இதயத்தின் ஒரு நரம்பு ஒரு வினாடி தொடப்பட்டால் அது அதிர்வடைந்து உங்கள் இருதயத்தைத் தொடுகிறது. அது விருப்பமான அல்லது புலம்பலான ஓசையாக இருக்கலாம். தமது ஜனங்களின் சந்தோஷங்களிலும் துக்கங் களிலும் அவருக்குப் பங்கு உண்டு. அவர் சந்தோஷப்படுகிறவர்களோடு சந்தோஷப் படுகிறார், அழுகிறவர்களோடு அழுகி றார். ஆனால் அவர் எப்படி மனதுருக்கம் கொள்பவர்?

இயேசுவோடுள்ள ஐக்கியம்

விசுவாசி பாடுபடும் போது இயேசுவின் உருக்கம் அதிகமாகக் காண் பிக்கப்படுகிறது. அக்கினிச் சூளையைக் கடக்கும் போது அவரது நிலைநிறுத்தும் பெலன், சுத்திகரிக்கும் கிருபை, ஆறுதல ளிக்கும் அன்பு இவையெல்லாம் அவருடைய பிள்ளைகளின் அனுபவத்தில் வெளிப்படுத்தப்படுகின்றன. தேவ குமாரன் நெருப்பில் அவர்களோடிருப் பார். நாசரேத்தூர் இயேசு அவர்களோடு பெரிய அலைகளிலும் இருப்பார். இதுவே மனதுருக்கம். இதுவே ஐக்கியம்- இதுவே கிறிஸ்து இயேசுவோடு ஒன்றித் திருத்தல்.

வாசகரே, உங்கள் துக்கம் என்ன? மரணத்தின் கரம் அடித்துவிட்டதா? அருமையானவர்கள் அகன்றுவிட்டார் களா? உங்கள் ஆசை நிராசையாகி விட்டதா? பெற்றோர், பிள்ளை, நண்பர், உலக ஆசீர்வாதங்களில் ஏமாற்றமா? உங்கள் மண்பாண்டம் உடைந்து விட்டதா? உங்கள் நீரோடைகளெல்லாம் வற்றிவிட்டதா? ஆயினும் இயேசு போது மானவர். அவர் உங்களை விட்டுத் தூரமாகவில்லை, தூரமாகவுமாட்டார். துக்கம் நிறைந்ததும் இரத்தம் சிந்துவது மான இருதயத்தை அவரிடம் கொண்டு வாருங்கள். நமக்காக துக்கமடைந்தும், இரத்தம் சிந்தியதும், இளைப்பாறுதல் தருபவரான அவர் மீது வைத்து விடுங்கள். அவர் உடைந்த இருதயத்தைக் கட்டக்கூடியவர். காயங்களை ஆற்று கிறவர். காயப்பட்ட ஆவியையும் அழுகிறவர்களையும் தேற்றுகிறவர்.

உங்கள் துக்கம் என்ன? ஆரோக் கியம் குன்றிவிட்டதா? சொத்து கை விட்டதா? நண்பர்கள் எதிராளிகளாகி விட்டார்களா? சூழ்நிலைகளால் களைத்து போய்விட்டீர்களா? பாதையில் திகிலா? எல்லா அனுகூலங்களும் இருண்டுவிட்டனவா? வரப்போகின்ற சோதனை காலங்களின் எண்ணமா? ஒளியேயில்லாத கடும் இருளுக்குள் நடக்கிறீர்களா? இயேசுவிடம் செல்லுங்கள். அவர் எப்போதும் திறந்த வாசல். உருக்கமும் அன்பும், உத்தமமும் நிறைந்த நண்பர். அருகிலிருப்பார். இக்கட்டுகாலத்தில் உதவும் சகோதரர். அவரது கிருபையும் உருக்கமும் உங்களுக்குப் போதுமானது.

நீங்கள் தரிசித்து அல்ல விசுவாசித்து நடக்கவேண்டியவர்கள். இதுவே விசுவாச வாழ்வின் மிகப்பெரிய இரகசியம். இயேசுவையே பற்றிக் கொள்ளுங்கள். எந்த சோதனையிலும் அவரிடம் செல்லுங்கள். உங்கள் பாரங் களை அவர் மேல் வைத்துவிடுங்கள். பலவீனம், குழப்பம், சிலுவை எதையுமே உடனடியாக இயேசுவிடம் கொண்டுசெல்லுங்கள். கிறிஸ்து உங்களுக்கு முன்னால், பின்பற்றக்கூடிய மாதிரியாகவும், சுத்தப்படுத்தும் நீரூற்றாகவும், கட்டியெழுப்பும் அஸ்தி பாரமாகவும், ஊறிவரும் ஊற்றாகவும்,

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

உருக்கமும், அன்பும் நிறைந்த சகோதரன், நண்பன் போலவும் எப்போதுமிருக்கட்டும். ஒவ்வொரு நாளும் விசுவாச வாழ்வில் பலப்படுங்கள்.

பவுலோடு சேர்ந்து "கிறிஸ்து வுடனே கூடச் சிலுவையில் அறையப் பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கி றேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக் கிறதோ, என்னில் அன்பு கூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக் கிறேன்" கலா.2:20.

என்ன பரிசுத்த மகிழ்வின் வாழ்வு! லௌகீகமற்ற பரம வாழ்வு! இயேசுவே வாழ்ந்த வாழ்வு! முன்னோர்கள், தீர்க்கர்கள், அப்போஸ்தலர்கள், இரத்த சாட்சிகள், பரிபூரணராக வாழ்ந்தவர்கள், உத்தம தேவ பிள்ளைகள் அழைக்கப்பட்ட வாழ் வாயினும் இவ்வுலகில் அன்னியரும் பரதேசிகளுமான பிரயாண வாழ்வு.

சோதனையில் பொறுமையோடிருப்பதின் ஆசீர்வாதம்

The blessedness of persevering through temptation

A.B.Simpson (1843-1919)

என் சகோதரரே நீங்கள் பலவித மான சோதனைகளில் அகப்படும் போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறை வுள்ளவர்களாயிராமல், பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி பொறுமையானது பூரண கிரியை செய்யக் கடவது யாக்.1:2-4. "சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத் தைப் பெறுவான்" யாக்.1:12. சோதனை யை எதிர்க்கும் மற்றும் சகிக்கும் யுத்தம் நமக்கு நன்மை செய்கிறது. இதனால் நாம் போதிக்கப்பட்டு, பலப்படுத்தப்பட்டு, நிலை நிறுத்தப்படுகிறோம். நீங்கள் ஊன்றிக் கட்டப்படவும் ஒழுங்காக்கப் பட்டு இறுதியில் அங்கீகரிக்கப் பட்டு பரிசும் அளிக்கப்படும்.

தாழ்மையும் அனுதாபமும்

சோதனையின் ஒரு சிறந்த விளைவு அது உங்கள் இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதைக் காண்பிக்கும். உங்களையே அது வெளிப்படுத்தும். சோதனை வருமட்டும் நீங்கள் பெலனாகவும் சுயநம்பிக்கையுடையவர் களாகவும் உணருவீர்கள். ஆனால் எதிரியின் ஆயுதத்தின் கூரியமுனை உங்கள் இருதயத்தை ஊடுருவக் குத்தும் போது உங்களுக்கு மற்றவர்கள் மேல் அதிக அனுதாபமும் உங்கள் சுய திருப்தியில் நம்பிக்கை குறைவும் ஏற்படுகிறது. அவரது பாதத்தில் உதவி யற்றவர்களாக தாழ்த்தப்பட்டு உடைந்த உள்ளத்தோடு காணப்படுகிறீர்கள். இதுவே உங்களுக்கு ஏற்பட வேண்டிய நல்ல நிலை. தேவன் உன் ஆயுதங்களைக் களைந்து போடவும், தாழ்மைப் படுத்தவும், பின்பு உயர்த்தி, இரட்சித்து, அவரது பெலனைத்தரவும் விரும்புகிறார். இதனால் நாம் நம்மைத் தாழ்த்தி நம்மைக் குறித்தே சந்தேகமுள்ளவர்களாகி விடுகி றோம். இதனால் நாம் கொடியவர்களா காமல் நமது அடைக்கலமாகிய கிறிஸ்து விடம் விரைந்து செல்லுகிறோம். "... சோதனையைத் தாங்கத்தக்கதாக சோதனையோடே கூட அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குகிறார்" 1கொரி.10:13. அவரிடம் பறந்து சென்றால்தான் பாது காவலைப் பெறமுடியும். அவர் உங்களை மூடிப் பாதுகாப்பார். நீங்கள் யுத்தம் செய்து அல்ல சிலுவைக்குப் பின்னால் ஒளிந்தும் இரட்சகரின் மடியிலிருந்தும் பாதுகாக்கப்படுவீர்கள்.

வெற்றியும் பெலனும்

சோதனை நமது விசுவாசத்தின் அப்பியாசமாயிருந்து நம்மை ஜெபிக்கப் போதிக்கிறது. ஒரு இளம் வீரனுக்கு படைப் பயிற்சி போலவும் யுத்தத்தை ருசி பார்ப்பது போலவுமிருக்கிறது. அது நம்மைப் புடமிட்டு, ஆயுதத்தை உபயோகிக்கப் பழக்கி, அவற்றின் வலிமையை நிரூபிக்கிறது. கிறிஸ்துவின் ஆதாரங்களையும் அவரது வாக்குத்தத் தங்களின் மதிப்பையும் காண்பிக்கிறது. தூய ஆவியானவின் உடனிருப்பையும் அறிவித்து அவரோடு இணைந்து நடக்கவும் அவரது பெலன், போதுமை ஆகியவற்றிற்குப் பின்னால் ஒளிந்து கொள்ளவும் செய்கிறது. ஒவ்வொரு வெற்றியும் வெற்றி விரரான இயேசுவின் மேல் அதிக நம்பிக்கை வைக்கவும் அடுத்த வெற்றிக்கு ஊக்கமளிப்பதாகவு மிருக்கும். நாம் வெற்றி பெறுகிறவர் களாக மட்டுமல்ல அதைவிட மேலாக, வெற்றிபெற்ற எதிரிகளின் கொள்ளைப் பொருட்களை ஒவ்வொரு போர்க்களத் திலுமிருந்து சேகரிக்க முடியும். எனவே சோதனை நாம் பெற்றுக்கொண்டதை பலப்படுத்தவும் நமது எல்லா ஆவிக் குரிய பண்புகள், கிருபைகள் எல்லா வற்றையும் நிலை நிறுத்தும். இரண்டு மடங்கு புயலுக்கும் தப்பி நிற்கும் மரங்கள் உறுதியானதும் வேர்களை மண்ணில் ஆழமாகப் பதித்திருப்பவை களுமாகும். அது போலவே ஆவிக்குரிய உலகிலும் என்பதை பேதுரு கூறுகிறார். "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவரா யிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக் காலம் பாடனு பவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப் படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவார்" 1பேதுரு 5:10.

கவனமாயிருங்கள்

சோதனை கவனமாயிருக்கவும் அதோடு ஜெபிக்கவும் வேண்டும் என போதிக்கிறது. அப்போதுதான் சோதனைக்குக் காரணிகளையும் சத்துருவின் தளத்தை விலக்கி வைக்கவும் முடியும். அனுபவம் இல்லாத கிறிஸ்தவன்தான் பிசாசுடன் (தீமையோடு) எளிதாக விளையாடு கிறான். **லூதர் இப்படி அடிக்கடி சொல்வார்:** "பிசாசோடு போராடுகிறவன் அவனுடைய தந்திரங்களில் சிக்கிக் கொள்ளாதபடி கவன மாயிருக்க வேண்டும்". **அத்தியட்சர் ஹாம்லின் சொல்லும் போது** "பிசாசினுடைய தோட்டத்தின் வேலியில் தேவனுடைய பக்கமாக நின்று ஜெபி" என்பாராம். பிசாசினுடைய தோட்டத்திற்குள் குதித்து விட்டு தேவனிடம் உதவி கேட்கக்கூடாது. ஆனால் தேவனுடைய பக்கத்தில் நின்று கொண்டு விழித்திருந்து சோதனைக்குட் படாதபடி ஜெபிக்க வேண்டும். அடிக்கடி நமது சுயநம்பிக்கை நம்மை தோற்கடிக்க முடியாது, ஆபத்தின் எல்லையில் தந்திர மாகவே பிடிப்பான். சிலர் அக்கினி கடலுக்கு வெகு அருகில் பிரயாணம் பண்ணுவதால், பாய் எரிந்து, கரைசேர முடியாமலாகிவிடும். மிகவும் முதிர்ச்சி யடைந்த கிறிஸ்தவன் மிகவும் தாழ்மையும் கவனமுமுடையவனாயிருப்பான். நாம் பெருமையுள்ளவர்களாக அல்ல, நம்பிக்கை, பயம் என்ற இரு பாதுகாவல் களையும் இணைத்துக் கொள்வோம்; "இப்படியிருக்க தன்னை நிற்கிறேன் என்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையா யிருக்கக்கடவன்" (1கொரி.10:12) மற்றும் "உங்கள் திராணிக்குமேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு, அவர் இடங் கொடாமல்..." 1கொரி.10:13. **இன்னொரு எச்சரிப்பு :** "ஆகையால் எனக்குப் பிரிய மானவர்களே விக்கிரகாராதனைக்கு விலகி ஓடுங்கள்" 1கொரி.10:14.

சோதனை நமக்கு பொறுமையைக் கற்றுத் தருகிறது. "**நீங்கள் ஒன்றிலும் குறை வுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறை வுள்ளவர்களாயும் இருக்கும்படி பொறுமை யானது பூரண கிரியை செய்யக்கடவது**" யாக். 1:4. ***கிறிஸ்தவ வாழ்வில் இறுதியான கிருபை பொறுமை.*** எனவே தேவன் நம்மை மிக வெப்பமான சூளையில் பிசாசின் அக்கினி கந்தகம் எரியுமிடத்தில் போட்டு விட்டதாக ஆச்சரியப்பட வேண்டாம். அவர் நம்மை அவரது மகிமையின் பாத்திரங்களாக்கப் போகி றார்.

மகிமையான வெகுமதி

"சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூருகிறவைகளுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்" யாக்.1:12. கடினமான இடங்களில், தவறான இடங்களிலும் இனிமையாக நின்றவர்கள், உலகத்தின் அசுத்தங்களின் மத்தியில் பரிசுத்தத்தைக் காத்துக் கொண்டவர்கள் தீமையான நாட்களிலும் நன்மை செய்து வாழ்ந்தவர்கள் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள். சோதனை அனுப விக்கிறவர்களே, சந்தோஷமாயிருங்கள். ஒரு நாள் ஒளிவீசும் கிரீடத்தைப் பெற்று ஆச்சரியமடைவீர்கள்.

"உமது சித்தம் ஆகக் கடவது"

"Thy will be done"

D.L.Moody (1837-1899)

ஜெபத்தின் ஒரு முக்கிய பகுதி ***ஒப்படைத்தலாகும்.*** ஜெபம் முழுவதும் முழுமையான ஒப்படைப்போடு தேவனுக்கு நேராக ஏறெடுக்கப்பட வேண்டும். நமது வேண்டுதல்களை ஏறெடுத்தபின் நமது மொழி 'உம்முடைய சித்தம் ஆகக்கடவது' என்றிருக்க வேண்டும் மத்.6:10. ஆயிரம் முறைகள் நமது சித்தத்தை விட அவரது சித்தம் செய்யப்பட வேண்டும். தேவன் பார்ப்பதை போல என் எதிர்காலத்தை நான் பார்க்க முடியாது. எனவே அதனை அவரே தெரிந்து கொள்வது நலம். அவரது மனதின் ஆவிக்குரிய காரியங்களை நான் அறிவேன். நான் சுத்திகரிக்கப்படவேண்டும் என்பது அவரது சித்தம். அப்படியானால் மட்டுமே நம்பிக்கையோடு அவரிடத்தில் ஜெபித்து ஒரு பதிலையும் எதிர்பார்க்க முடியும் ஆனால் தற்காலிக விஷயங்களில் அது வித்தியாசமானது. நான் கேட்பது தேவனுடைய நோக்கத்திற்கு ஏற்றதாக இல்லாமலிருக்கலாம்.

ஒரு பரிசுத்தவான் இப்படிக் கூறுகிறார்: "ஜெபம் என்பது என் எண்ணங்களுக்கும் நோக்கங்களுக்கும் தேவன் இறங்கிவரச் செய்வதல்ல, அவரது அரசை எனது மடமையான சிறியதனமான சில வேளைகளில் பாவமான நோக்கங்களுக்கு கொண்டு வருவதல்ல. நான் அவரோடு உணர்வில் உயர்த்தப்பட்டு அவரோடு இணைந்து முற்றிலும் அவரது ஆலோசனைக்கு இணங்கி அவரது நோக்கத்தை நிறைவேற்றுவதாகும். ஆனால் நாம் மனதில் வருகிற எல்லாவற்றையும் நிறைவேற்ற வேண்டிய ஒருவராக எண்ணி ஜெபிக்கிறோம். ஆனால் உண்மை என்னவெனில் தேவன் என்னைவிட நன்றாக எல்லா வற்றையும் அறிபவர். எனவே எனது சித்தம் செய்யப்பட வேண்டும் என்று சொல்வதை விட 'உமது சித்தம் ஆகக்கடவது' என்பதே மேலானது".

ஒரு பெண்மணி சுகவீனமாயிருந்த போது அவள் உயிரோடிருக்கவா அல்லது மரிக்கவா விரும்பினாள் என கேட்கப்பட்டது. அவள் பதிலாக: 'தேவனுடைய விருப்பம்' என்றாள். அப்போது தேவன் ஏதோ ஒன்றைத் தெரிந்து கொள்ளச் சொன்னால் அவள் என்ன செய்வாள் எனக்கேட்ட போது தான் அவரிடமே அதை ஒப்புவித்து விடுவதாகப் பதிலளித்தாள். அவள் தேவ சித்தத்தை முற்றிலும் நிறைவேற்றுகிறவள்.

எஸ்பர்ஜன் என்பவர் இதைக் குறித்து, விசுவாசிக்கிற மனிதன் எல்லாக் காலங்களிலும் தேவனைச் சார்ந்து கொள்கிறான்; அதனால் அவன் தெய்வீக உள்ளத்தோடு உறவு வைத்துக் கொள்கிறான் என்கிறார். ஜெபம் என்பது தனிமொழி அல்ல. அது இருவரும் பேசுவது, சுயபரிசோதனை அல்ல, உதவிவரும் கன்மலையை நோக்கிப் பார்ப்பது. மனபாரத்தை ஒரு இரக்கமுள்ள நண்பரிடம் இறக்குவது ஒரு விடுதலை. விசுவாசம் இதனை அதிகமாக உணருகிறது. ஆயினும் ஜெபம் இதை விடக் கூடுதலானது. கீழ்ப்படிதலுடன் ஜெபிக்கும் ஒருவர் தேவையானதைப் பெற்றுக் கொள்ளாமலிருக்கும் போது நம்பிக்கையோடு தேவகரம் எதிர்பார்க்கப் படுகிறது. விசுவாசத்திற்கு அதற்கு சொந்த சித்தம் கிடையாது. சித்தம் தேவனுடைய மனதோடு இணைந்திருக்க வேண்டும். விசுவாசத்திற்கு தேவ சித்தமே மிக நல்லது என்று தெரியும். நமக்கு நன்மையானது நமது விண்ணப்பங்களுக்கு அளிக்கப்படும்.

ஜெபம் என்பது நம் எண்ணங்களுக்கும் நோக்கங்களுக்கும் தேவன் இறங்கி வரச் செய்வதல்ல.

தனிப்பட்ட ஒப்படைப்புக்காக ஜெபியுங்கள்

இந்த முழுமையான ஒப்படைப்புக்கு (தெய்வீக சித்தத்திற்கு) நாம் Fenelon என்பவருடைய ஜெபத்தை ஏறெடுக்கலாம். "தேவனே, நான் கொடுக்க முடியாத என் இருதயத்தை நீர் எடுத்துக் கொள்ளும். நீர் அதை எடுத்து நீர் வைத்துக்கொள்ளும் ஏனெனில் நான் உமக்காக அதைப் பாதுகாப்பாக வைக்க முடியாது. என் குறைகளைப் பாராமல் என்னை இரட்சியும்".

இந்தக் குறிப்பில் உலகின் சில தலை சிறந்தவர்கள் பெரிய தவறு செய்திருக்கிறார்கள். மோசே இஸ்ரவேலருக்காக ஜெபித்தான். தேவனோடு போராடக்கூடியவனாயிருந்தான். ஆனால் தேவன் அவனது வேண்டுகோளுக்குப் பதில் தரவில்லை. லீபனோனைப் பார்க்க யோர்தான் வரை எடுத்துச்செல்ல தேவனிடம் கேட்டான். நாற்பது ஆண்டுகள் வனாந்தரத்தில் அலைந்துவிட்டு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தில் பிரவேசிக்க விரும்பியும் அவனது ஆசையை தேவன் நிறைவேற்றவில்லை. அது தேவன் அவனை நேசிக்காததற்கு அடையாளமா? அல்ல. அவன் தேவனால் அதிகமாக நேசிக்கப்பட்டவன் தான். ஆயினும் அவனுடைய வேண்டுதல் கேட்கப்படவில்லை. நமது பிள்ளைகள் சில காரியங்களை நம்மிடம் கேட்கும்போது நாம் கொடுப்பதில்லை. காரணம், அவை பிள்ளைகளுக்குத் தீங்கு இழைக்கக் கூடியது. மோசே கானானுக்குள் பிரவேசிக்க விரும்பின போதும் கர்த்தர் அவனுக்காக வேறொன்றை வைத்திருந்தார். தேவன் அவனை அடக்கம் பண்ணினார், எந்த மனிதனுக்கும் கொடுக்கப்படாத மரியாதை.

1500 ஆண்டுகளுக்குப்பின் தேவன் மோசேயின் ஜெபத்தைக் கேட்டார். அவன் வாக்குப்பண்ணப்பட்ட நாட்டில் சென்று வரப்போகிற மகிமையை குறித்த ஒரு பார்வையை பெற்றான். மறுரூப மலையில் எலியா என்ற பெரிய தீர்க்கனோடும், பேதுரு, யாக்கோபு, யோவான் என்பவர்களோடும் தேவ சிங்காசனத்திலிருந்து வந்த குரலைக் கேட்டான். 'இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்கு செவி கொடுங்கள்' மாற்.9:7; லூக்.9:35. இந்த அனுபவம் யோசுவா போல யோர்தானைக் கடந்து கானானில் 30 ஆண்டுகள் வாழ்வதைவிட மேலானது. எனவே நாம் ஒரு உலக ஆசீர்வாதத்தை ஜெபத்தின் மூலம் கேட்கும்போது கேட்கப்படாவிட்டால், தேவ சித்தத்துக்கு நம்மை ஒப்படைப்போம். அது முற்றிலும் சரியாயிருக்கும்.

எலியா ஜெபத்தில் வல்லவன். அவனது ஜெபத்தின் மூலம் வானத்திலிருந்து அக்கினி இறங்கி பலியை அங்கிகரித்தது. விடாய்த்த தேசத்தில் அவனது ஜெபம் மழையைக் கொண்டு வந்தது. ஜெபத்தின் வலிமையால் ஆகாப் அரசனுக்கு முன்பாக பயமில்லாமல் நின்றான். ஆயினும் ஒரு கோழையைப் போன்று ஒரு சூரைச்செடியின்கீழ் "நான் சாக வேண்டும்" என்று ஜெபித்தான். தேவன் அவனை மிகவும் நேசித்தபடியால் அவனை அக்கினி மயமான ரதத்தில் பரத்துக்கு எடுக்கச் சித்தமானார். நாம் விரும்புகிற நேரத்திலும் விதத்திலும் தேவன் பதில் அளிக்காவிட்டால் தேவன் நம்மை நேசிக்கவில்லை என்று பிசாசு நம்மை ஏமாற்றவிடக் கூடாது.

பழைய ஏற்பாட்டில் மோசேயின் சரித்திரம் அதிகமாக எழுதப்பட்டுள்ளது. பவுலின் சரித்திரம் புதிய ஏற்பாட்டை நிரப்புகிறது (ஆண்டவராகிய இயேசு தவிர) ஆயினும் பவுல் தனக்காக எப்படி ஜெபிப்பது என்று அறியாதிருந்தார். அவர் தமது மாம்சத்திலிருந்த முள் எடுக்கப்படும்படியாக ஜெபித்தார். அந்த வேண்டுதல் கேட்கப்படவில்லை. ஆனால் கர்த்தர் ஒரு பெரிய ஆசீர்வாதத்தை அருளினார். அவருக்கு அதிக கிருபைதனை அளித்தார். நமக்கு நம்மை சோதிக்கும் முட்கள் மாம்சத்திலிருக்கலாம்; அப்படி அவற்றை அகற்ற தேவ சித்தமில்லாவிடில் அவற்றை சகிக்க அதிக கிருபைதரும் படியாக தேவனிடம் கேட்போம். பவுல் தமது பலவீனங்களில் தேவனை மகிமைப்படுத்தினார். ஏனெனில் அதற்கு மேலாக தேவனுடைய வல்லமையும் அவருக்குப் பெருகிற்று. ***நம்மில் சிலர், எல்லாம் நமக்கு எதிராக இருப்பதாக உணருகிறோம்.*** பவுல் பயன்படுத்திய வார்த்தைகளை நாமும் பயன்படுத்துவோம். தேவனில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாகவே நடக்கிறது. எனவே நாம் ஜெபிக்கும் போது அர்ப்பணத்தோடு, 'உம் சித்தம் ஆகக்கடவது' என்று ஜெபிப்போம்.

யோவான் சுவிசேஷத்தில் "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" யோ.15:7 என்று படிக்கிறோம். ஏன் கிறிஸ்துவில் நிலைத்திருக்கவில்லை? எப்போதோ ஒருமுறை சென்று சந்திக்கிறீர்கள் அவ்வளவுதான். கிறிஸ்து என் இருத

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

யத்தில் இருந்தால் அவரது சித்தத்திற்கு எதிராக எதையும் நான் கேட்க மாட்டேன். நம்மில் எத்தனை பேரில் தேவவசனம் நிலைத்திருக்கிறது? நமக்கு பெரிய ஆசை இருந்தால் வேத வாக்கியங்களை ஆராய்ந்து நாம் கேட்டது சரியா எனக் கண்டுபிடிக்க வேண்டும். நாம் விரும்புகிற அநேக காரியங்கள் நல்லவைகள் அல்ல. நாம் தவிர்க்கும் சில காரியங்கள் நல்ல ஆசீர்வாதங்கள். **ஜான் பனியன்** பெட்ஃபோர்டு சிறைக்காக அவரது வாழ்வில் தேவனை அதிகமாகத் துதித்தார். துன்பங்களுக்காக நாம் ஜெபிப்பதில்லை. ஆனால் அவைதான் அடிக்கடி நமக்கு மிக நல்லவைகளாயிருக்கின்றன.

துன்பங்கள் ஆசீர்வாதங்களாக மாறின

டையர் என்பவர், "துன்பங்களுக்காக நாம் தேவனை துதிக்கும் போது அவை ஆசீர்வாதங்களாகி விடுகின்றன. பாடுகள், அனேகர் பாவம் செய்வதைத் தடுக்கிறது. ***தேவனுடைய ஒரே பேறான குமாரன் பாவமற்றவர். ஆனால் அவர் பாடுகளற்றவரல்ல. அக்கினி போன்ற சோதனைகள் தங்கமயமான கிறிஸ்துவர்களை உருவாக்கும்.*** சுத்திகரிக்கும் துன்பங்கள் ஆவிக்குரிய பதவி உயர்வுகள்" என்று கூறுகிறார்.

ரூதர்ஃபோர்டு "சுத்திகரிப்பின் சோதனைகளும் அவைகளில் அடங்கியிருக்கும் அர்ப்பணிக்கும் ஞானமும் குறித்து" எவ்வளவாக என் ஆண்டவராகிய இயேசுவின் சுத்தியல், சூளை ஆகியவற்றிற்காக நான் நன்றிக்கடன் பட்டவன்! அவர் எனக்கு, கோதுமையாகிய இயேசு அரைவு ஆலையிலும் அடுப்பிலும் கடத்திச் செல்லப்பட்டு தமது மேஜைக்கு அப்பமானார்! கிருபை சோதிக்கப்படும் போது கூடுதலான கிருபை. கிருபை தன் குழந்தைப் பருவத்திலிருக்கிறது. தெய்வீகம் என்பது வெளிப்படையை விட கூடுதலானது. இவ்வுலக நன்மைகள் அழிந்து போகக் கூடியவை. சோதனையில்லாமல் கிருபையின் சத்தியத்தை யார் அறிவார்? கிறிஸ்து, அதிக உழைப்பு வேதனை நமக்காக சகித்தார். சிலுவை இல்லையேல் விசுவாசம் உறைந்தே போகும். எனது ஆண்டவரின் ஏர் எனது ஆத்துமாவில் தழும்புகளை ஏற்படுத்தட்டும். அவர் சோம்பலான தோட்டக்காரன் அல்ல. அவர் ஒரு அறுவடையை எதிர் பார்க்கிறார். வெட்டாந்தரை வாடிய நிலம் இப்போது செழிப்பாக மாறி அறுவடைக்கு ஆயத்தமாகிறது. மிகவும் வேதனையோடு இந்த தரிசுநிலம் உடைக்கப்பட்டது".

எரேமியாவின் புலம்பலில் வரும் ஒரு பகுதி இதற்குப் பொருத்தமாயிருக்கிறது. படியுங்கள் புலம்பல் 3:25-41.

முக்கிய அறிவிப்பு

காணிக்கை அனுப்பும் போது உங்கள் முழு முகவரியையும், மொபைல் எண்ணையும், பெயருக்கு மேல் அச்சிடப்பட்டுள்ள உங்கள் பக்திரிகை பதிவு எண்ணையும் தயவாய் எழுதுங்கள்.

அக்கினிச் சூளை அதிகச் சூடாக்கும் போது என்ன செய்வீர்கள்?

What do you do when the furnace gets hotter?

Alec Brooks

விசுவாசத்தைக் குறித்து இந்நாட்களில் அதிகமாக கேள்விப்படுகிறோம். விசுவாசம் போதுமான அளவு இருந்தால் மட்டுமே நாம் விரும்புகிறவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். லௌகீக ஆசீர்வாதங்களுக்காக ஒருபோதும் நாட்டம் கொள்ளக்கூடாது. வியாதியும், தாழ்ச்சியும் விசுவாசக் குறைவின் அடையாளங்களாகும்.

வேதபுத்தகம் கிறிஸ்துவின் காசோலை. அங்கு சொல்லப்பட்டிருக்கும் வாக்குத்தத்தங்கள் காசோலை இதழ்களாகவும் தேவன் பரம வங்கி மேலாளராகவும் நாம் கேட்கிற பணத்தைக் கொடுக்கிறவராகவும் இருக்கிறார்.

விசுவாசம் என்பது வேத வசனங்களை அறிக்கை பண்ணுவது அல்லது அதைக் குறித்து நேர்மறையாகப் பேசுவதும் அல்ல. விசுவாசம் ஒருவரது நம்பிக்கையை தேவன் மீதே வைப்பதாகும். அவர் எப்படியிருக்கிறாரோ அப்படியே நமக்குமிருக்க சம்மதிப்பதாகும். அவரை நம்புவது என்பது அவர் பார்ப்பது போல் நாம் பார்க்கவும், அவர் நினைப்பதையே நாம் நினைப்பதுமாகும்.

விசுவாசம் என்பது அவரது வாக்குத்தத்தங்களை நம்புவதல்ல வாக்குத்தத்தங்களை அளித்தவரை நம்ப வேண்டும். தேவன்சராசரங்களின்சர்வ வல்ல தேவன், தமது அன்பால் சுயாதீனமாக செயல்படுகிறவர், ஞானத்தோடு கிரியை செய்பவர், தனது பிள்ளைகளுக்கு நன்மைக்கேதுவானவைகளை எல்லா சூழ்நிலைகளிலும் செய்கிறவர்.

அவரது வாக்குத்தத்தங்கள் நமக்கு உத்தரவாதமாக அவருடைய நோக்கத்திற்காக அளிக்கப்பட்டுள்ளன. அவை நம்மை சந்தோஷப்படுத்துவதுடன், தூய்மைப்படுத்தி இயேசுவைப் போலாக்குகின்றன. இதனை ரோமர் 8:28-39 வசனங்களில் பார்க்கலாம். நாம் அவரை நம்பி அவரோடு ஒத்துழைத்தால் அவர் தமது நோக்கத்தை நிறைவேற்றுவார். அதாவது இயேசுவைப் போலாக்குவார். 35-39 வசனங்களில் சில சூழல்கள் துன்பங்களையும், பாடுகளையும், பஞ்சங்களையும் அல்லது நிர்வாணத்தையும் ஏற்படுத்தினாலும் எந்த நிலையிலும் நமக்கு எப்போதும் தேவ பிரசன்னம் உண்டு.

நாம் ஒரு அசாதாரண உலகில் வாழ்கிறோம். அது அவர் சிருஷ்டித்தது போல இல்லை. இங்கு ஏழ்மை, வியாதி, பாடுகள் ஆகியவை ஏதோ ஒரு விதத்தில் நம்மை பாதிக்கின்றன. நாம் பூரண ஆரோக்கியம், சுயாதீனம், தாழ்ச்சியின்மை ஆகியவற்றை இயேசுவின் அரசு முழுமையாக ஸ்தாபிக்கப்படுமட்டும் பெற முடியாது. அதுவரை இவ்வுலகில் கிறிஸ்தவர்கள் பாவம், சுயநலம், சமூக அநீதி போன்ற பாடுகளை அனுபவித்தே ஆகவேண்டும்.

உலகப் பிரச்சனைகளுக்கு இறுதி விடையாக மனிதனையும் மனிதனுடையதிட்டங்களையும் நம்பும் ஒரு சமூக சுவிசேஷத்தை நாம் மறுக்கிறோம். ஆனால் நாம் செல்வச்செழிப்பு சுவிசேஷத்தையும் மறுக்க வேண்டும். ஏனெனில் அது தேவன் ஒருசில போதுமான விசுவாசமுள்ளவர்களுக்கு பாடுகளிலும் தாழ்ச்சியிலுமிருந்து விடுதலை தருவதாகப் போதிக்கிறது.

தேவனுடைய மகிமை அவருடைய இயற்கையான பெரிய காரியங்களைச் செய்யும் திறமையில் மட்டுமல்ல, அவரது தூய்மை, அன்பு ஆகிய குணாதிசயங்களிலும் விளங்குகிறது. இயேசுவால் மகிமைப்பட்டது போல அவர் தமது ஜனங்களால் மகிமைப்படுகிறார். அது அவர்கள் குறைவின்றி வாழ்வதாலல்ல, எல்லா சூழல்களிலும் கீழ்ப்படிதலோடும் நம்பிக்கையோடும் வாழ்ந்த படியால் தான். ஆபகூக் இதை அழகாக எடுத்துக் காட்டுகிறார்: ஆபகூக் 3:17-19 வசனங்கள் படிக்க.

கிறிஸ்தவனின் சாட்சி பிதாவை மகிமைப்படுத்துமானால் அவன் உலகத்தின் பிரச்சனைகளால் தொடப்படவில்லை என்பது கருத்தல்ல அவன் இவ்வுலகில் என்ன நடந்தாலும் தேவ பிரசன்னம் ஆறுதலளித்து நிலைநிறுத்துவதால் பயமின்றி வாழ்கிறான்.

இதை எபிரேயர் 11-ல் வாசிக்கிறோம். இங்கு தேவன் விசுவாசம் என்றால் என்ன? அது என்ன செய்கிறது என்பதை போதிக்கிறார். அங்கு ஆண்களும் பெண்களும் விடுதலை பெற்று அற்புதங்களை அனுபவித்தார்கள் என்பதையும் அதனுடன் பாடுபட்டு மரித்தார்கள் என்பதையும் படிக்கிறோம். அவர்கள் தேவனை அறிந்து, முழுவதும் நம்பி, அவரால் அங்கீகரிக்கப்பட்டார்கள்.

விசுவாசம் தேவனுடைய வாக்குத்தத்தங்களை மட்டும் அடிப்படியாகக் கொண்டதல்ல. அது தேவனுடைய நபரத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. தேவனை அறியும் அறிவால் அது வளருகிறது. தேவனை அவர் இருப்பது போல அறிவதற்கான ஒருவருடைய சாதாரண பிரதிவினை தான் விசுவாசம்.

தேவன் ஆபிரகாமுக்குத் தன்னை வெளிப்படுத்திய போது ஆதியாகமம் 17-ல் அவர் அனேக வாக்குத்தத்தங்களை அவனுக்கு அளித்தார். ஆனால் அவர் ஆபிரகாமுக்கு "நான் செய்வேன்" என்று சொல்லுமுன் அவனிடம் தாம் சொன்ன எல்லாவற்றையும் ஆபிரகாமிலும் அவன் மூலமாகவும் செய்வதாக வாக்குப் பண்ணினார்.

(8-ம் பக்கம் பார்க்க)

அவருடைய வசனத்தின் மூலம் அவர் தருகிற வாக்குத்தத்தங்களுக்காக நாம் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். நோயாளிகளுக்காக ஜெபித்து அவர் குணமாக்குவார் என்று நம்ப வேண்டும். நமது எல்லா தேவைகளையும் அவர் சந்திப்பார் என்று முழு மனதோடு தொடர்ந்து விசுவாசிக்க வேண்டும். எனினும் நமது ஜெபம் நாம் எதிர்பார்க்கிறபடி கேட்கப்படாவிட்டால் நாம் ஷாத்ராக், மேஷாக், ஆபெத்நெகோ போல "நாங்கள் ஆராதிக்கிற தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார், விடுவிக்காமற் போனாலும் நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை; நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்ளுகிறதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக் கடவது என்றார்கள்" தானி.3:17-18.

அவர்களது அர்ப்பணம் தேவனுக்காக இருந்தது. தேவனை அவர்கள் அவரை சர்வவல்லவராகவும், அவர் நல்லதையும் சரியானதையுமே செய்வார் என்றும் நம்பி, என்ன நடந்தாலும் அவர் மேல் நம்பிக்கையுடனிருக்க விரும்பினார்கள். ***அந்தச் சூளையில் தான் அவர்கள் தேவனையும் விடுதலையையும் கண்டுகொண்டார்கள்.*** அவர்களது விசுவாசத்தின் பலனாக தேவனுடைய நாமம் ஒரு புறஜாதி தேசத்தில் கனப்படுத்தப்பட்டது.

நல்ல நாட்களிலும் கஷ்ட நாட்களிலும் அவரை நம்புகிறவர்களால் தேவன் மகிழ்ச்சியடைகிறார். அவர் களுக்கு தம்மை வெளிப்படுத்தி அவர்கள் மூலம் மகிமைப்படுகிறார். பயத்தினால் அனைவரும் நடுநடுங்கி கோலியாத்தை விட்டுப் பின்வாங்கின போது, தாவீது அவனை எதிர்க்கத் துணிவு கொள்ள காரணம் என்ன? மற்றவர்கள் தங்களை கோலியாத்துடன் தாரதம்மியப்படுத்தினார்கள். ஆனால் தாவீது கோலியாத்தை தேவனுடைய பின்னணியில் பார்த்தான். தேவனுடைய உத்தமம், அவரது வல்லமை ஆகியவற்றை எண்ணிப்பார்த்தான். மற்றவர்கள் தங்கள் பாதுகாவலைக் குறித்து கரிசனை கொண்டார்கள். தாவீதின் முக்கிய கரிசனை தேவனுடைய மகிமையாயிருந்தது.

தாவீது கோலியாத்தை சந்தித்த போது அவன் ஆணவமாக இருக்க வில்லை. தேவ சமுகத்தில் அவன் சமயம் செலவழித்தான். தேவ வல்லமையை அவன் அனுபவத்தில் கண்டிருந்தான்.

இயேசு சிலுவையில் தொங்கிய போது அவர், "**என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்**" எனக் கதறினார். நாம் தேவனிடமிருந்து பிரிந்துவிடாத படி பாடுகளை அவர் சகித்தார். சூளை எவ்வளவு சூடானாலும் "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்று கூறியவர் நம்மோடிருக்கிறார். அவரும் அவரது நோக்கமும் மாறுவதில்லை . நாம் இன்னும் அவர் மூலமாகப் பரிசுத்தமும் உறுதியும் பெறுவோம். "**தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்**" மாற்கு11:22.

பாடுகள் வழியாக பரிபூரணம்

Perfect through suffering

From a tract

ஒரு வருடமாகக் குடுவை வடிவான ஒரு எம்பெரர் பட்டுப்பூச்சியின் கூட்டை வைத்திருந்தேன். அதன் அமைப்பில் அது மிக வித்தியாசமாக இருந்தது. ஒரு ஒடுக்கமான திறப்பு அந்த குடுவை அமைப்பின் கழுத்தின் இடப் பகுதியில் இருந்தது. இந்த துவாரம் வழியாக முழு பூச்சியும் வெளிவரும் போது, அந்தக்கூடு ஒரு சிதைவும் இல்லாமல் அப்படியே இருக்கும்.

பூச்சி வெளியே வரும் திறப்பும் உள்ளே இருக்கும் பூச்சியின் பருமனும் நாம் ஆச்சரியப்படக்கூடியவை. இந்த ஒடுங்கிய திறப்பின் வழியாக வெளி வரும் போது, தேவன் சிறகுகளின் நாளங்களுக்குள் சக்தியை செலுத்து கிறார். அவை அப்போது சரியாக வளர்ச்சியடைந்திருப்பதில்லை.

நான் இந்தப்பூச்சி கூட்டுக்குள் பல நாளிருந்துவிட்டு வெளியேறும் முயற்சியைப் பார்த்தேன். ஒரு முற்பகல் முழுவதும் அடிக்கடியாகப் பொறுமை யோடு அது வெளியேற முயற்சிப்பதை நான் கண்டேன். குறிப்பிட்ட நிலைக்கு மேல் அதனால் கூடவில்லை. நானும் பொறுமையிழந்தேன். நான் அதன் சிருஷ்டிகரை விட ஞானமும் உருக்கமும் உள்ளவனென்று எண்ணி அதற்கு உதவி செய்ய தீர்மானித்தேன். கத்திரிக்கோலால் சற்று பெரிதாக்கினேன், உடனடியாகவே சிறிய சிறகுகளும் பருமனான உடலு முடைய அப்பூச்சி வெளி வந்தது.

அதன் இறக்கைகள் என் கண் களுக்கு முன்பாக அமைதியாகவும் வேகமாகவும் வளர்ச்சி பெற்றன. அவற்றில் புள்ளிகளும் பல நிறங்களும் பரவின. அவற்றைப் பார்த்து அந்தப் பூரண அழகை ரசித்தேன். உண்மையில் இது ஒரு அழகிய பூச்சி.

ஆனால் எனது தவறான இரக்கம் வீணானது. அதன் வளர்ச்சி நின்று விட்டது. ஊர்ந்து வேதனையோடு சென்ற அதன் குறுகிய வாழ்வு முடிந்து விட்டது. அது வானவில் நிறங்களோடு வானில் பறக்க முடியவில்லை.

அந்த பிற்பகல் வேளையில் நான் கற்றுக்கொண்ட பாடம் அடிக்கடி என் மனதில் வருகிறது. ***ஏற்றக் கறியத்திலும் 'தேவனுடைய வழியே சிறந்தது' என புரிந்து கொண்டேன்.*** துக்கங்களோடு குழம்பிக் கொண்டிருக்கும் மக்களைப் பரிதாபக் கண்களோடு பார்த்து, அவர்கள் சிட்சையைக் குறைத்து விடுதலை கொடுக்க முயன்றது எனது கிட்டப் பார்வையின் முட்டாள் செயல்.

தூரப்பார்வையுடைய பரிபூரணரான தேவன் அன்பினால் தனது பொருட்கள் பூரணத்தை அடைய தற்கால பாடுகளி லிருந்து விலக்குவதில்லை. அவர் தமது பிள்ளைகளுக்கு உண்மையானவர். அவர்களை தந்தையின் அன்பால் சிட்சிக்கிறார். அதை அவர்கள் அழுவ தால் விட்டுவிட்டால் அவர்கள் அவரது பரிசுத்தத்தில் பங்குபெற முடியாது. இந்த மகிமையான முடிவுக்காக அவர் சிட்சையை விட்டு விடாமல் கீழ்ப்படி தலைப் பயிற்றுவிக்கிறார். இவ்வாறு மகிமைக்கு நேராக வழிநடத்திக் கொண்டிருக்கிறார். எனவேதான் பாதை பல வேளைகளில் கடினமாயிருக்கிறது.

இவ்வாறு சிட்சிப்பது அவரது முகத்தை நாம் தேடுவதற்காகவும் அவரது பிரசன்னத்தில் இருந்துக் கொள்வதற்கு மாகும். சங்.27:8-ல் "என் முகத்தை தேடுங்கள்" என்று வாசிக்கிறோம். சிட்சை பெற்ற சங்கீதக்காரன் கூறுவதைப் பார்ப்போம்.

"நானோ ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப் போயிருப்பேன். கர்த்தருக்குக் காத்திரு அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்து வார். திடமனதாயிருந்து கர்த்தருக்கே காத்திரு" சங்.27:13,14.

சிந்தனைக்கு:

துன்பங்களுக்காக நாம் தேவனை **துதிக்கும்** போது அவை ஆசீர்வாதங் களாகி விடுகின்றன. பாடுகள், அனேகர் பாவம் செய்வதைத் தடுக்கிறது.

விசுவாசம் என்பது அவரது வாக்குத்தத்தங்களை நம்புவதல்ல வாக்குத் தத்தங்களை அளித்தவரை நம்ப வேண்டும்.

நாம் **விரும்புகிற** அநேக காரியங்கள் நல்லவைகள் அல்ல. நாம் **தவிர்க்கும்** சில காரியங்கள் நல்ல ஆசீர்வாதங்கள்.

துன்பங்களுக்காக நாம் ஜெபிப்பதில்லை. ஆனால் அவைதான் அடிக்கடி நமக்கு மிக **நல்லவை**களாயிருக்கின்றன.

பிசாசினுடைய தோட்டத்திற்குள் குதித்து விட்டு தேவனிடம் உதவி கேட்கக்கூடாது. ஆனால் தேவனுடைய பக்கத்தில் நின்று கொண்டு விழித்திருந்து சோதனைக்குட்படாதபடி **ஜெபிக்க** வேண்டும்.

சிலர் **அக்கினி** கடலுக்கு வெகு அருகில் பிரயாணம் பண்ணுவதால், பாய் எரிந்து, **கரையே** முடியாமலாகிவிடும்.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason